**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**OS 67/2021**

01.08.2025

**<u>வா.சா.1 மேகநாதன் த/பெ. கலியபெருமாள் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

வழக்கு சொத்து எங்கு உள்ளது என்றால் பருத்திக்கோட்டை கிராமத்தில் உள்ளது. வழக்கு சொத்தானது 26.06.1974 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் மூலம் என் தகப்பனாருக்கு கிடைத்ததாக சொல்லியுள்ளேன். அந்த பாகப்பிரிவினையில் C அட்டவணை சொத்து என் தகப்பனாருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. C அட்டவணையில் மட்டும் மொத்தம் எத்தனை அட்டவணை சொல்லப்பட்டுள்ளது என்றால் மொத்தம் 24 அயிட்ட சொத்துகள் சொல்லப்பட்டுள்ளது. அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் B அட்டவணை சொத்து என் பெரியப்பாவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் என்பெரியப்பா மீது இதே நீதிமன்றத்தில் மற்றோரு வழக்கு சுவாதீனபரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்கில் எத்தனை அயிட்ட சொத்துகள் சொல்லியுள்ளேன் என்றால் 4 அயிட்ட சொத்துகள் சொல்லியுள்ளேன். இந்த வழக்கில் என்ன சர்வே எண்கள் சொல்லியுள்ளேன் என்றால் 96/2, 95/2 ஆகும். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ. 4 வில்லங்க சான்றானது 01.01.1974 முதல் 31.12.1974 வரை ஒரு ஆண்டுக்கு தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த காலம்வரையில் வில்லங்க சான்று தாக்கல் செய்யவில்லை. வழக்கிற்கு முன்பு வா.சா.ஆ. 5 யை அனுப்பியிருந்தேன் அதற்கு பிரதிவாதி 05.08.2020 ல் பதிலறிவிப்பு அனுப்பியிருந்தார் அது வா.சா.ஆ. 6 ஆகும். அந்த பதில் அறிவிப்பில் சொத்தின் அனுபவம் பிரதிவாதிகளிடம் இருப்பதாகவும் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பின்பு இந்த வழக்கை நான் தாக்கல் செய்தபோது வழக்கு சொத்துகள் எனக்கு மட்டும் சொந்தமான சொத்துகள் என்று விளம்புகை பரிகாரம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்துகள் எந்த பட்டாவில் வருகிறது என்றால் நினைவில்லை. நான் அனுபவத்தில் இருந்தேன் என்று குறிப்பிட்டு காட்டுவதற்கு எந்தவிதமான வரி ரசீதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி அனுப்பிய பதிலறிவிப்பிலும் எதிர்வழக்குரையிலும் வழக்கு சொத்தில் ஒரு ஆழ்குழாய் கிணறு உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கிணறு மின்னிணைப்பு பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி அந்த மின்இணைப்பை பெற்று 15 ஆண்டுகள் இருக்கும் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே அவர் பெயரில் மின் இணைப்பு இருந்து வந்தது எனக்கு தெரியும் என்றால் சரிதான். அதற்கு எழுத்துபூர்வமாக நான் எந்த ஆட்சேபணையும் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தின் நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியும். வாய்காலுக்கு தெற்கு , கிழக்கு ராமதாஸ் புஞ்சைக்கு வடக்கு , மேற்கு ஆகும். இரண்டு எண்களுக்கும் சேர்த்து ஒரே நான்கெல்லை தான். அதைதான் என்னுடைய வழக்குரையிலும் சொல்லியுள்ளேன். பிரதிவாதியின் தகப்பனார் பெயர் கோவிந்தசாமி ஆகும். அவர் என் பெரியப்பா ராமதாஸ் இடமிருந்து நிலம் கிரயம் வாங்கியுள்ளாரா என்றால் வாங்கியுள்ளார். பிரதிவாதியின் தகப்பனார் 2010 ல் இறந்துவிட்டார் என்றால் அதுபற்றி தெரியாது. பிரதிவாதியின் தகப்பனார்

இறக்கும் வரை அவர் தான் சொத்தை சுவாதீனம் செய்து வந்தார் என்றால் இல்லை அவர் மகன் தான் சுவாதீனம் செய்துவந்தார். பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை சங்கதிகளை மறுத்து பதில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதேபோல் வழக்குரையை விளம்புகை பரிகாரம் கேட்டது தொடர்பாக சீர்திருத்தம் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தை பிரதிவாதி அவர் தகப்பனார் என் பெரியப்பாவிடம் கிரயம் வாங்கிய சொத்துகளும் சேர்த்து கிரயகால முதலே தனித்து அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. அந்த விபரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்றாலும் தெரிந்திருந்தே பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. என்னுடைய வழக்கு காலவரம்பு சட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. நான் காவல் துறையில் புகார் கொடுத்தது தொடர்பாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கில் சொல்லியுள்ள வழக்குமூலம் , தேதி தவறானது என்றால் சரியல்ல. ஆகையால் இவ்வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்ககூடியது அல்ல என்றாலும் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.

சார்பு நீதிபதி,

மன்னார்குடி.